அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு புரட்டாசி - ஐப்பசி அக்டோபர் 2016 முரசு 10 ஒலி 112




## 05-10-2016 புதன்கிழமை
## திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானாரின் 194வது வருவிக்கவுற்ற தினம்

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/-

ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



சாகாக் கல்வியின் தரமெலாம் கற்பித்து
ஏகாக் கரப்பொருள் ஈந்த சற்குருவே

# 5-10-2016 வள்ளல் பெருமானார் வருவிக்கவுற்ற தினம்

## சத்குரு தோத்திரம்

உலகம் தழைக்க வந்துதித்த உருவே வருக!
ஓதாதே உற்ற கலைகள் அனைத்தினையும்
உணர்ந்தோய் வருக!

வள்ளல் பெருமான் அவதரித்த
திருமருதூர் இல்லம். வடலூரிலிருந்து
சுமார் 10கி.மீ தொலைவில்
அமைந்துள்ளது.
அனைவரும் வருக!
குருவருள் பெறுக!





# திருச்செவிக்கு விண்ணப்பம்

அண்டபிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை யுண்மைத்தரத்தை அறிதல்வேண்டும் என்றும், இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தல் வேண்டுமென்றும், எனது உள்ளகத்தே ஓவாதுறைந் தூற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகுகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றது ஆகலின், 'அறிவாரறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண்ணங்களையும் உடையவர் அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங்கடவுள்' என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாக் கொண்டு, தன்மைசாலாத் தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்குந் தொடங்கினேன்.

இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர், எனதறிவிற்கும் கருத்திற்கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங்களுள் ஒன்றேனும் ஈண்டு இயற்படத் தோற்றாமையின், அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை வண்ணங்கள், எத்தன்மையவோ! எத்தன்மையவோ! வென்று உணர்ந்து உணர்ந்து கருதிக்கருதி உரைத்துரைத்து அதிசயிக்கின்றவனானேன்.

இயற்கை உண்மைத் தனிப்பெரும் பொருளாயும் இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும் இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுகமாயும் பிரிவின்றி நிறைந்த பெருந்தன்மையராய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் வலத்தால் பொறி, புலன், கரண முதலிய தத்துவங்கள் அனைத்தையும் வென்று நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று தம்முண்மை யுணர்ந்து இயற்கை உணர்ச்சியைப் பெற்று இயற்கையுண்மைக்கண் இயற்கை இன்பானுபவஞ் செய்கின்ற சுத்த யோகாந்தர்களும், சுத்த கலாந்தர்களும், சுத்த போதாந்தர்களும், சுத்த நாதாந்தர்களும், சுத்த வேதாந்தர்களும், சுத்த சித்தாந்தர்களுமாகிய சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருக்கூட்டங்களை நன் முயற்சியாற் றனித்தனி யடைந்து பத்தியாற் பணிந்து அற்புதப் பெருஞ் செயல் புரிகின்ற ஐயர்களே! அருட்பெருஞ்ஜோதித் தனிப் பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுகம் இருந்த வண்ணம் உள்ளம் உவந்துரைத் தருளல் வேண்டும்.

- திருஅருட்பா வசனபாகம்

திருச்சிற்றம்பலம்



# வருவிக்கவுற்ற வள்ளல்

உலகில் வாழ் உயிரினங்களிலே உயரிய இனம் மனித இனம் என்பது தெளிவானது. அதிலும் மனிதன் தன்னுடைய அகத்தேயும் புறத்தேயும் இறையாற்றல் நிறைந்துள்ளது என்பதை தெரிந்து கொண்டுள்ளான் என்பதும் அறிந்ததே.

இறையாற்றல் எப்படிபட்டது, அதனை உணர்வது எவ்வாறு என்பதெல்லாம் ஓர் செய்தியாக மட்டுமே அவனால் செவிமடுக்க முடிகின்றது. ஏனெனில் மனிதன் வாழ்வில் உலகபோகத்தினால் ஏற்படுகின்ற சிந்தனை மாற்றங்களும், பல பிறவிகளில் ஏற்பட்ட அழுத்தமான பதிவுகளுமே காரணமெனலாம்.

மனிதன் வாழ்வியலில் அவனது தேவைகளுக்காகவும் சிந்தனைகளுக்காகவும் பயன்படுகின்ற அறிகருவிகளும், அவற்றின் தத்துவங்களும் மிகவும் மாசுபடிந்து அசுத்தமாகி இருக்கின்றது.

இது ஒருபுறம் இருந்தாலும், இறையென்பது மிகவும் தூய்மையானதாக மனிதனின் அகத்திலும், புறத்திலும் நிறைந்துள்ளது. எவ்வாறு தூய்மையான பாதரசத்தின் மூலம் பாலின் தூய்மை அறியப்படுகின்றதோ அதனைபோல், அசுத்தங்களற்ற ஓர் தூய்மையான பொறிபுலன்களும், கரணகருவிகளும் கொண்ட மனிதனால் மட்டுமே தூய்மையான இறைத்தன்மையை உணர்ந்து கொள்ளக்கூடுமென்பது தெரிய வருகிறது.

இதில் இறையாற்றலென குறிப்பிட்டது யாதெனில் இறை தன்மையாகிய அருள் ஆகும். ஆனால் படித்த அறிஞர்கள் அலைகடல், மலை மற்றும் ஆறு சூழ்ந்த புற விஷயங்களைக் கொண்ட இயற்கை எழிலையே இறை ஆற்றலென்று அழைக்கின்றனர்.

இறையாற்றலின், தன்மை மற்றும் அருள் ஆகியவற்றை பற்றி அறிய வேண்டுமெனில் அதனை ஓர் ஞானியிடமும், குருவிடமும் கேட்க வேண்டும். ஞானிகளின் வழிகாட்டுதலின் மூலம்தான் இறையருளை அடைவதற்கான தகுதியை பற்றி அறிந்து கொள்ள முடியும்.

ஞானிகளும், குருமார்களும் அதனை அகவிஷயம் என்பர். அதற்கான தகுதியை விளக்கும் பொழுதுதான் இதுநாள் வரை ஒருவனின் அறிகருவிகளாகிய பொறிபுலன்களிலும் கரணங்களிலும் உள்ள குற்றங்கள் அல்லது அசுத்தங்கள் பற்றி புரிய வரும்.

குழந்தை விளையாடும்போது குப்பையில் தவறவிட்ட பொருளை எடுத்து தூய்மை செய்து பயன்படுத்துவதை போல்தான் ஆகின்றது. இதனைத்தான் திருவள்ளுவர் "மனத்திற்க்கண் மாசிலன் ஆதல்" என்கின்றார்.

மனிதன் தன் அகக்கருவிகளில் உள்ள அசுத்தங்களை நீக்க பலநாள் பழக வேண்டியுள்ளது.

ஒரு பொருளின் கசடு – பழுது நீங்கும் பொழுதுதான் அது தூய்மை அடைகின்றது. ஒரு இலக்கை அடையதக்க வாகனம் பழுதின்றி இருந்தால்தான் அதில் பயணிக்கின்றவன் இலக்கை எளிதில் எட்ட முடிகின்றது.

உலகியலாம் வாழ்வியலை விட்டுவிலகி இறையியலாம் அவ்வியலை கற்க முற்படும் பொழுதுதான், ஒருவன் தான் எப்படி இருந்தான், தன்னை எப்படி மாற்றிக் கொள்ள எத்தனித்துக் கொள்வது என்பது பற்றிய புரிதல் ஏற்படுகின்றது.

மனிதனின் அகக்கருவிகளில் இருக்கின்ற குறைகளும் கேடுகளும் ஆதியில் இருந்தே வந்துள்ளது. இவைகள் மும்மலங்களின் மூலமும், குணங்களின் மூலமும், ஆழ்ந்த பதிவுகளின் மூலமும் வந்துள்ளது என தெரிகின்றது.

அசுத்தங்களையும் துரிசுகளையும் தூய்மைபடுத்தி ஞானிகளும் யோகிகளும் இறையருளை அடைந்து முத்தி பெற்றனர். அவர்களில் சிலர் சித்தி நிலைகளை எய்தினர். ஆனாலும் சமய மதத்தவர்களைச் சார்ந்தவர்கள் மரணத்தையே முத்திநிலை என்று கருதி முடித்தனர்.

வேதாந்திகள், தங்களுடைய உடல் மற்றும் அகக்கருவிகள் யாவும் தத்துவ குப்பைகளைக் கொண்ட குப்பைக் கூடையே என நினைத்து உடலை மதியாமல் தன்னையறிதல் என்னும் சுயத்தில் நிலைத்து முத்திநிலையை இலக்காக கொண்டு இந்த உடலை போய்விடச் செய்தனர்.

அதனிலும் சற்று மேல்சென்று சித்தர்கள் இந்த பொய் உடலை மெய் உடலாய் மாற்றி அசுத்தங்களையும், துரிசுகளையும் நீக்கி தூய்மை அடையச் செய்து, முத்தி நிலைக்கும் மேல் சித்தி நிலையை பெற்று சிலகாலம் இவ்வுடலை நீட்டிக்கச் செய்தனர்.

இதற்கெல்லாம் மேலாக முத்திநிலையை முதல் சாதனமாக்கி, சித்தி நிலையை அனுபவமாக்கி, அருள்நிலையாம் இறைநிலையைக் கண்டு அதில் இரண்டற கலந்து மனித குலத்தையே வியக்க வைத்தவரின் ஆன்மீக புரட்சியை பற்றி ஆய்வோம்.

**அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்**
**திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க**
**சங்கத்து அடைவித்திட அவரும்**
**இகத்தே பரத்தை பெற்று மகிழ்ந்**
**திடுதற்கு என்றே எனை இந்த**
**உகத்தே இறைவன் வருவிக்க**
**உற்றேன் அருளை பெற்றேனே!**



**– திருவருட்பா**

உலகர் அனைவரையும் திருத்தி, சன்மார்க்க சங்கத்தினை அடைந்திடவும், இந்த இக உலகத்திலேயே பர இன்பத்தைப் பெற்று வாழ்வாங்கு வாழ்விப்பதற்கே இறைவனால் வருவிக்க உற்றேன். இதுவே நம் பெருமானார் பூவுலகில் வந்த நோக்கத்திற்கான ஓர் செய்தி பாசுரம்.

நம் அருட்பிரகாச வள்ளலாரின் அவதாரம் இறை வாக்கினால் நிகழ்ந்த சம்புபக்ஷ சிருஷ்டி.

மருதூர் சிறிய கிராமம், மத்தியான உச்சி வெய்யில். அதிதிக்கு அன்னம் அளித்தபின் ஆகாரம் உண்ணும் பழக்கம் சின்னம்மைக்கு. அன்றும் வழக்கம் போல் காத்திருந்தார், சிறிது நேரத்தில் சிகை தூக்கி முடிந்த ஜடாமுடி சிவனடியார் ஒருவர் வந்தார். அதிதி வந்த நோக்கம் அறிந்து அன்புடன் அன்னம்பாலித்தார் சின்னம்மை. அடியார் ஆனந்தம் அடைந்தார். சின்னம்மையாருக்கு திருநீற்று பிரசாதம் அளித்து, 'உனக்கு உலகம் உய்க்க ஒரு மகன் பிறப்பான்' என்று ஆசீர்வதித்து மறைந்தார். அந்த இறையடியாரின் அருள் வாக்கினைக் கேட்டமாத்திரத்தில் சின்னம்மையார் கருவுற்றார்.

இவ்விதம் அவதரித்த நம் பெருமானார் ஆறுமாதக் குழந்தையாய் இருந்தபோது தாய் தந்தையர் சிதம்பரம் கோவிலுக்கு தரிசனம் செய்ய இட்டுச் சென்றனர். அங்கே சிதம்பர ரகசியம் காட்டப்பட்டது. அப்போது குழந்தை பெருமானார் தன் அன்னையின் அரவணைப்பில் இருந்தப்படியே அதனைப் பார்த்து சிரித்தார். ஆண்டவர் அவருக்கு சிதம்பர இரகசியத்தை வெளியாக காட்டியுள்ளார். சிறு குழந்தைக்கு தெய்வத்தின் தரிசனம் ஓர் அற்புத நிகழ்வாகும். பின்னாளில் நம் பெருமானார் தாம் அருளிச்செய்த திருஅருட்பா பாசுரமொன்றில் இதைக் குறிப்பிடுகின்றார்.

**தாய்முதலோ ரோடுசிறிய பருவமதில் தில்லைத்**
**தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது**
**வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்**
**வெளியாகக் காட்டிய என் மெய்உறவாம் பொருளே**
**காய்வகை இல்லாதுளத்தே கனிந்தநறுங் கனியே**
**கனவிடத்தும் நனவிடத்தும் எனைப்பிரியாக் களிப்பே**
**தூய்வகையோர் போற்றமணி மன்றில் நடம் புரியும்**
**சோதிநடத் தரசே என் சொல்லும் அணிந்தருளே. – திருவருட்பா**

ஓதாது உணர்ந்த பெருமானாரின் புகழ் ஓங்கிட ஆண்டவன் அருளிசைந்து ஆற்றிய திருவிளையாடல்கள் ஆயிரம் ஆயிரம்.

**ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு**
**கோடியும் விளங்கக் குலவு மெய்ப்பொருளே. – (அகவல் 912)**

இறையருளால் வள்ளல் பெருமானார் பெற்ற சித்துக்களையும், நடத்திய அற்புதங்களையும் சொல்லில் எழுத்தில் வருணிக்க முடியாது.

அன்பும் கருணையும் நிறைந்த அருட்பிரகாசரின் உயிரிரக்கம் அளவிட முடியாதது. பயிர் வாட அவர் உயிர் வாடியது உலகறியும். அவர் உயிர்தான் இரக்கம், இரக்கம்தான் அவர் உயிர், இவ்விரண்டும் ஒன்றேயன்றி இரண்டில்லை என்றே இறைவன் மீது ஆணையிட்டு இயம்புகின்றார்.

இரக்கமே தன் உயிர் என்று இயம்பியவர் உலக உயிர்களுக்கெல்லாம் கடுந்துயர், அச்சம் முதலான வருத்தத்தை இறையருளால் அவர் தவிர்த்திடல் வேண்டும் எனவும்; இந்த உலகம் புலை, கொலை இல்லாத நெறியில் நடக்க வேண்டும் எனவும் இறைவனிடம் வேண்டி விண்ணப்பிக்கின்றார்.

அன்புருவானவர் பிற உயிர்கள் துன்பப்படுவதையும் வருத்தம் உருவதையும் ஒரு சிறிதும் தன் கண்களால் பார்த்தும், செவிகளால் கேட்டும் ஒரு கணமும் தன் உள்ளம் சகிக்காது, அவ்வுயிர்களுக்கு உற்ற வருத்தத்தை தவிர்த்து அவை யாவும் இன்புற்று வாழ வரம் தருதல் வேண்டும் என்று ஆண்டவரிடம் விண்ணப்பித்தலே அவர் பிற உயிர்களிடம் கொண்டிருந்த தயவிற்கு பெரும் சான்று.

உயிர்கள் மேல் அவர் கொண்டிருந்த கருணையை கண்டு ஆண்டவரே அவரை அணுகி "மகனே! இந்த உலகில் மனிதர்கள் அனைவரும் பகையால், பொறாமையால் போர்புரிந்து வீணே மடிகின்றனர். அவர்களையெல்லாம் இனியும் வீண்போகாத வண்ணம் புனிதமான சன்மார்க்க நெறியை அவர்களுக்கு விளக்கி, மெய்ப்பொருளை நன்கு உணரச் செய்து, உலகர் அனைவரையும் சுக நிலையில் வாழச் செய்வாயாக!" என அருட்பணியிட்டார்.

வள்ளல் பெருமானார் சுத்த சன்மார்க்க நெறியின் மரபெது? அதை எவ்விதம் உபதேசிப்பது? என்றெல்லாம் சிந்தித்தவராய் இருக்க அதற்கு ஆண்டவர் அருளிசைந்தது யாதெனில், **"சாகாத கல்வி ஒன்றே கல்வி; ஒன்றே சிவம் என அறிந்த அறிவே தகும் அறிவு; மலமாகிய ஆணவம், கன்மம், மாயை, திரோதாயை, மாமாயை ஆகிய ஐந்தையும் வெல்லுகின்றதே சிறந்த வல்லபம்; வேகாக்கால், போகாப்புனல், சாகாதலை என மூன்றையும் கண்டு அதன் வல்லபத்தால் இவ்வுலகில் எந்த ஒன்றையும் ஆக்கும் வல்லபமே தொழில் இந்த நான்கினையும் ஒருங்கே நீ அடைந்து மகிழ்க! உலகமெல்லாம் உனை தொழுது உன்பின் வந்து சுத்த சன்மார்க்கத்தின் இந்த மரபினை பின்பற்றட்டும்"** என வரம் அளித்தார்.

பெருமானார் தயவால் தான் பெற்ற பேற்றினை உலகர் யாவரும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்திட, சுத்த சன்மார்க்க பெருநெறியை அடைந்திட உயிரிரக்க வழிபாட்டினை இயம்பி அருளினார். இதனால் அவர் அடைந்த அருள் அனுபவம் ஆயிரமாயிரம். **"இப்பொழுது என்னுடைய அறிவு அண்டண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது."** என பேருபதேசத்தில் இயம்பியுள்ளார்.

பிற உயிர்களிடத்தில் கொண்ட தயவினால் அவர், இதுவரை உலகில் தோன்றிய ஞானியர் எவரும் பெற்றிடாத இயலாம் முத்தேக சித்திகளாகிய சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் பெற்று பேரின்ப சித்தி பெருவாழ்வு அடைந்தார்.

சுத்த தேகம் எனப்பட்டது பொன் தேகம், 12 வயது பருவம் போலவும், நரை, திரை, பிணி, மூப்பு, மலஜலம், வியர்வை, ஆகாரம், நித்திரை, தாகம் மற்றும் சாயை இல்லாமலும் இருப்பது. இத்தேகத்தைப் பெற்ற நம் வள்ளல் பெருமானாரை எவராலும் புகைப்படம் எடுக்க முடியவில்லை.

பிரணவ தேகம் எனப்பட்டது 16 முதல் 108 வரையில் மாற்றுள்ள பொன் தேகம், 5 முதல் 8 வயது தோற்றம், தேகம் பிடிபடாது, சர்வ சித்தியுடனும் விளங்கும்.

ஞான தேகம் எனப்பட்டது அளவு கடந்த மாற்று பொன் தேகம், சர்வ மகாசத்தி, உருவம் தோன்றியும் தோன்றாமலும் விளங்கும். இதுவே ஒளி தேகம் எனப்பட்டது.

**சுத்த வடிவும் சுகவடிவும் ஓங்கார**
**நித்த வடிவும் நிறைந்தோங்கு – சித்தெனும்ஓர்**
**ஞான வடிவும் இங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்**
**தான விளையாட்டியற்றத் தான்.**


**நானே தவம்புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்**
**நானே அருட்சித்தி நாடடைந்தேன் – நானே**
**அழியா வடிவம் அவைமூன்றும் பெற்றேன்**
**இழியாமல் ஆடுகின்றேன் இங்கு – சுத்த சிவநிலை; திருவருட்பா**

நம் வள்ளல் பெருமானார் ஒளி தேகம் பெற்று இறைநிலை கண்டு துரியாதீத நிலையில் கடைசி நிலையாம் சுத்தசிவ குருதுரியாதீத நிலையை எய்தினார்.

அன்பு, கருணை, தயவு ஆகியவற்றால் தத்துவங்கள் அனைத்தையும் தூய்மையாக்கி முழுமையான அறிவு பெற்று, ஒளி மயமாகி இறைநிலை எய்தியதற்கு நம் வள்ளல் பெருமானாரே சர்வ சாட்சி என்று அவரே அருளியுள்ளார்.

சர்வ வல்லமையும், சர்வ தயாபரரும், தூய உடம்பினனும், முடிவிலா ஆற்றலும் உடையவராகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை அடைவதற்கு மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் எல்லா உயிர்களிடத்தும் தயவுடையவராய் இருந்து தம் குற்றங்களையெல்லாம் நீக்கி தூய கரணங்களுடன் தொழுதால் இறை பேரின்பத்தை அடையாளம் என்பது சத்தியம்.

இதனை மண்ணுலக உயிர்களுக்கு உணர்த்தத்தான் திருவருட்பிரகாச வள்ளலார் இறைவனால் இப்பூவுலகத்திற்கு வருவிக்கவுற்றார்.



**நம் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் வருவிக்கவுற்ற தினம் [திருஅவதார தினம்] வருகிற அக்டோபர் மாதம் 5ம் தேதி புதன்கிழமையன்று மருதூரில் வள்ளல் பெருமான் அவதரித்த இல்லத்தில் [வடலூரிலிருந்து 10கி.மீ தொலைவில் உள்ளது.] சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. அத்தினத்தில் அனைவரும் கலந்து கொண்டு மனிதரில் புனிதராவோம்.**

*திருச்சிற்றம்பலம்*

# மூத்தோர்சொல் அமிர்தம்

சீடன் ஒருவன் தன் குருவிடம் "குருவே! கடவுளை ஆலயம் சென்றுதான் வணங்க வேண்டுமா? அதன் முக்கியத்துவம் என்ன?" என்று வினாவினான்.

இப்படி அவன் கேட்டு முடிப்பதற்குள் குரு "அப்பா! தாகமாக இருக்கிறது கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்றார்.

சீடன் உடனே ஓடிச்சென்று ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தான்.

இப்போது குரு அவனைப் பார்த்து, "நான் உன்னை தண்ணீர்தானே கேட்டேன். நீ ஏன் பாத்திரத்தைக் கொண்டு வந்தாய்" என்றார்.

சீடன் குழம்பியவனாய் "ஐயா! பாத்திரம் இல்லாமல் தண்ணீரை எப்படி கொண்டுவருவது?" என்று கேட்டான்.

அதற்கு குரு, "அதுபோலத்தானப்பா கோயிலும். தண்ணீர் என்பது இறைவன் என்றால் அதைக் கொண்டுவரும் பாத்திரம்தான் கோயில். கோயில் என்பது கடவுளை வணங்குவதற்கான இடம்" என்றார்.

சீடனுக்கு தெளிவு பிறந்தது. மீண்டும் குரு பேசலானார். **"என் அருமைச் சீடனே! ஒன்றை நினைவில் கொள். தண்ணீரை பாத்திரமாகக் கருத முடியுமா? அது சாத்தியமா? இல்லை அல்லவா. அதுபோலத்தான் கோயிலோ அங்கிருக்கும் உருவங்களோ கடவுள் ஆகாது. கோயில் என்பது இறைவனை நினைத்துப் பழகுவதற்கான இடம்"** எனக் கூறிமுடித்தார்.

**நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே. – திருமந்திரம்**

யாரொருவர் தினமும் ஆலயம் சென்று இறைவனை திருமுறைகளால் பாடி துதித்து பக்தி செய்து ஒழுக்கத்தோடு வாழ்கிறாரோ அவர் மனம் ஒருமைப்படும். அந்த ஒருமைப்பட்ட நெஞ்சத்தையே இறைவன் கோயிலாகக் கொண்டு அருள்வான்.

---

ஒரு சக்கரவர்த்தி அரண்மனை ஒன்றினைக் கட்டினார். பாதுகாப்பு கருதி அதற்கு அவர் ஒரேயொரு கதவினை மட்டும் வைத்தார். அந்த நுழை வாசலிலும் பெரும் பாதுகாப்புகள் போடப்பட்டிருந்தன. பக்கத்து நாட்டு மன்னர் அவரை காண வந்தார். அந்த அரண்மனை அவருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. "இது மிகவும் பாதுகாப்பாய் அமைக்கப்பட்டுள்ளது. எந்த எதிரியாலும் உள்ளே நுழைய முடியாது. எனவே இதைப் போலவே அச்சுஅசலாக நானும் ஓர் அரண்மணையை கட்டப் போகிறேன்" என்றார்.

வந்த மன்னர் கிளம்பும்போது, இந்த சக்கரவர்த்தி அவரைத் தடபுடலாய் வழியனுப்பி வைத்தார். பெரிய கூட்டம் அங்கு கூடியிருந்தது. கிளம்பிய மன்னர் "இந்த அரண்மனை என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தி

விட்டது. இப்படியே நானும் ஒன்று கட்டப் போகிறேன்" என்று திரும்பவும் கூறினார்.

அப்போது அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஒரு முதியவர் இதை கேட்டு விட்டுச் சிரிக்க ஆரம்பித்து விட்டார். வந்த மன்னர், "எதற்காக சிரிக்கிறாய்?" என்று கேட்டார்.

"இப்படியொரு அரண்மனையை நீ கட்டும்போது, இதோ இவர் செய்துள்ள பிழையை நீயும் பண்ணி விடாதே!" என்றார் முதியவர்.

"என்ன பிழை இதில் இருக்கிறது?" என்று கேட்ட மன்னனுக்கு அந்த முதியவர், "ஒரு கதவு உள்ளதே அதைக்கூட நீ வைக்காதே. ஒரு கதவு கூட வேண்டாம் அனைத்துக் கதவுகளையும் மூடு. அப்போது நீ ஐயத்துக்கு இடமின்றிப் பாதுகாப்பாய் வாழ்வாய்" எனப் பதிலளித்தார்.

"அப்போது அது அரண்மனையாய் இருக்காது. கல்லறையாய் ஆகிவிடும்" என்றார் மன்னர்.

"இந்த அரண்மனையும்தான் கல்லறையாய் ஆகியுள்ளது. ஒரேயொரு கதவை மட்டும் வைத்து விட்டு அதன் வாசலில் ஊரிலுள்ள அத்தனை பாதுகாப்புகளையும் தந்தால், எத்திசையிலிருந்தும் அதற்கு அச்சுறுத்தல்கள் இருக்காது. எனில் அது கல்லறைதானே" என்றார் முதியவர்.

இதுபோல்தான் நாமும் வங்கி கணக்கில் நல்ல இருப்பு, வீடு, ராணுவ பாதுகாப்புள்ள நாடு இதெல்லாம் இருந்தால் பத்திரமாய் இருக்கலாம் என்று நினைக்கிறோம். இப்படியெல்லாம் பல ஏற்பாடுகளையும் வசதிகளையும் செய்து கொள்வதால் நாம் ஏறத்தாழ இறந்தவர்களாகி விட்டோம் என்பதை விளங்கி கொள்வதில்லை. ஏனென்றால் கல்லரையில் இருக்கும் பிணங்கள்தான் முழு பாதுகாப்பில் பத்திரமாய் உள்ளன. அவற்றால் இப்போது சாகக்கூட முடியாது; அவற்றை எவராலும் கொல்லவும் முடியாது. இவ்வாறுதான் மாறிவிடும் நம்முடைய வாழ்க்கை.

நாமெல்லாம் பயமில்லாமல் இருப்பதுதான் பயமின்மை என்று நினைத்து கொண்டிருக்கிறோம். உண்மையில் பயமின்மை என்பது பயம் நம்முன் முழுமையாய் வந்து நிற்கும்போது அதனை முழு துணிவுடனும், இறை நம்பிக்கையுடனும் எதிர்கொள்வதுதான். இதைத்தான் எல்லா ஞானிகளும், மகான்களும் செய்தனர்.

**பயம்எனும்ஓர் கொடும்பாவிப் பயலே நீஇதுகேள்**
**பற்றற என்தனைவிடுத்துப் பனிக்கடல் வீழ்ந்தொளிப்பாய்**
**தயவின் உரைத்தேன் இன்னும் இருத்திஎனில் உனதுதன்**
**தலைக்குத் தீம்புவரும் தலைமட்டோ நினது**
**செயலுறும் உள்உடம்பு அழியும் சுற்றமெலாம் இறக்கும்**
**தீர்ந்தது இனிஇல்லை என்றே திருவார்த்தை பிறக்கும்**
**அயலிடை நேர்ந்தோடுக நீஎன்னை அறியாயோ**
**அம்பலத்துஎன் அப்பன்அருள் நம்புபிள்ளை நானே.**

என திருஅருட்பா பாசுரத்தில் நெஞ்சுரத்துடன் பயத்திற்கே பயம் காட்டுகிறார் நம் வள்ளல் பெருமான்.



## அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**ஔவியம் ஆதிஓர் ஆறுந் தவிர்த்தபேர் 95**

**அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி 96**

| | | |
|---|---|---|
| ஔவியம் | - | பொறாமை |
| ஔவியம் ஆதி ஓர் ஆறும் | - | பொறாமை முதலான ஆறு தீக்குணங்களும் |
| தவிர்த்தபேர் | - | அவ்வாறு தவிர்ந்த இயல்பினால் |
| வழுத்தும் | - | வழுத்துகின்ற; தொழுகின்ற |
| அருட்பெருஞ்ஜோதி | - | அருட்பெருஞ்ஜோதியே |

**ஔ**வியம், உட்பகை ஆறனுள் ஒன்று. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய ஆறும் மக்களுக்குள்ள உட்பகை என்று கூறப்பெறும். உட்பகை ஆறு என்று தொகுத்துக் கூறுவது வழக்கு. காமாதி ஆறு என்பர். காமம் முதலான ஆறென்பது பொருள்.

| | | |
|---|---|---|
| காமம் | - | அவா, ஆசை |
| குரோதம் | - | கோபம், வெறுப்பு |
| உலோபம் | - | கையிறுக்கம், கருமித்தனம் |
| மோகம் | - | பேரவா, பேராசை |
| மதம் | - | செருக்கு, ஆணவம் |
| மாச்சரியம் | - | செற்றம், பொறாமை |

வெளிப்பகையைவிட உட்பகை கொடியது. வெளிப்பகை வெளிப்படையாகத் தெரியும். உட்பகை வெளிப்படையாகத் தெரியாது. உள்ளுக்குள்ளேயே இருந்து கெடுக்கும். வெளிப்பகை பகிரங்க விரோதி என்றால், உட்பகை அந்தரங்க விரோதி.

காமத்தில் மோகத்தையும், குரோதத்தில் மாச்சரியத்தையும், மதத்தில் உலோபத்தையும் அடக்கி, காமம் வெகுளி மயக்கம் என உட்பகையை மூன்றாகக் கூறுவதும் உண்டு.

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்.**

என்பது திருக்குறள் மெய்யுணர்தல் அதிகாரத்துக் குறட்பா. நோய் என்பது ஈண்டுப் பிறவிநோய். இவை மூன்றின் நாமம் கெட என்றதை ஊன்றிக் காணவேண்டும். மூன்றின் பேருங் கூடத் தலைகாட்டக் கூடாது என்பது பொருள். நாமம்கெட - பெயரும் இல்லாதபடி ஒழிய. காமம் வெகுளி மயக்கம் ஆகிய மூன்றுக்கும் கூறிய இக்குறள், உட்பகை ஆறுக்கும் பொருந்தும்.

உட்பகை ஆறின் பெயரும் அற்றுப்போக வேண்டும். உட்பகை ஆறையும் காமமுதலாகக் கூறுவது வழக்கெனினும், முதலெழுத்தாக

வரவேண்டியிருத்தலின் ஔவியம் மாதி ஓர்ஆறும் என்று ஔவியத்தை முதலில் வைத்துக் கூறினார்.

ஔவியம் - பொறாமை, அழுக்காறு. 133 அதிகாரங்கள் என வகுத்துக்கொண்டு திருக்குறளைச் செய்த வள்ளுவர் பெருமான் அழுக்காறுக்கு எனத் தனி ஒரு அதிகாரமே வைத்தார். அறத்துப்பால், அதிகாரம் 17, அழுக்காறாமை. அழுக்காற்றை "அழுக்காறு என ஒரு பாவி" என்றே சாடினார். அழுக்காறுதான் ஔவியம் என்பது, "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்" என்ற குறளாற் பெறப்படும். அவ்விய நெஞ்சம் - பொறாமை உள்ளம், அழுக்காறு நிறைந்த நெஞ்சம். அவ்வியம் - ஔவியம் (ஒருவகைப் போலி)

அறங்கூற வந்த ஔவைப் பிராட்டியாரும் "ஔவியம் பேசேல்" என்று ஆத்திசூடியில் கூறினார்.

அருட்பெருஞ்ஜோதியை வழுத்துவதற்கு ஔவியமாதி ஓராறையும் தவிர்க்க வேண்டும். ஔவிய முதலான ஆறையும் தவிர்த்தவரே (தவிர்த்தபேரே) அருட்பெருஞ்ஜோதியை வழுத்தி அருள் பெறுவர். "ஔவியமாதி ஓர் ஆறும் தவிர்த்தபேர் அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி" என்றதன் பொருள் இதுவே.

**விருப்போடு இகல் உறு வெறுப்பும் தவிர்த்தே 331**
**அருட்பேறு அளித்த அருட்பெருஞ்ஜோதி 332**

| | | |
|---|---|---|
| விருப்போடு | - | விருப்பத்தோடு, விருப்பத்தையும் |
| இகல்உறு | - | அதனோடு மாறுபட்ட |
| வெறுப்பும் | - | வெறுப்பையும் |
| தவிர்த்தே | - | நீக்கி |
| அருட்பேறளித்த | - | அருட்பேற்றை அளித்தருளிய |
| அருட்பெருஞ்ஜோதி | - | அருட்பெருஞ்ஜோதியே |

விருப்பும் வெறுப்பும் ஒன்றனோடு ஒன்று மாறுபட்டவை. ஆதலின் விருப்போடு இகல்உறு வெறுப்பும் என்றார். இகல்உறுதல் - மாறுபடுதல்.

நல்லதன் நலமும் தீயதன் தீமையும் விருப்பு வெறுப்புகளால் தோன்றாமற்போம். விருப்பால் தீயதின் தீமை தோன்றாது. வெறுப்பால் நல்லதன் நன்மை தோன்றாது.

எதையும் விருப்பு வெறுப்பு இல்லாது அதன் நலந்தீங்குகளை ஆராய்ந்து அறிந்து ஒழுக வேண்டும்.

**காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருள்கண்**
**ஆய்தல் அறிவுடையார் கண்ணதே – காய்வதன்கண்**
**உற்றகுணந் தோன்றாத தாகும் உவப்பதன்கண்**
**குற்றமும் தோன்றாக் கெடும்.**

என்பது முனைப்பாடியார் இயற்றிய அறநெறிச்சாரம்(42)

காய்தல் - வெறுப்பு. உவத்தல் - விருப்பு. விருப்பு வெறுப்பின்றி நடுநிலையோடு ஒழுகப் பழகல் வேண்டும்.

“செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்தோடா நிலைமை” என்று இந்நிலையைச் சான்றோர் கூறுவர். (செஞ்சாந்தெறிதல் - சந்தனம் பூசிவிடல். செத்துதல் - செதுக்குதல். போழ்தல் - பிளத்தல்)

இன்பம் வரினும் துன்பம் வரினும் இரண்டையும் ஒப்பக் கருதும் மனச்செம்மை “திரு” எனப்படும். “கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்”, “திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்டோர்” என்பனவும் இந்நிலையே.

வள்ளற்பெருமானது உபதேசங்களில் “விருப்பு வெறுப்பு” என்ற தலைப்பில் அன்பர் இருவர் குறித்து வைத்துள்ளது வருமாறு.

## விருப்பு வெறுப்பு

விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள்: விருப்பென்பது யாது? ஒன்றை வேண்டிப் பந்தப்பட்டு, பூரண லக்ஷியத்தை விட்டு, அதிசயமாகப் பார்த்து நிற்றல். இந்த விருப்பால் தானுங் கெட்டு, இதர வஸ்துவுங் கெட்டு, சாதனமுந் தடைப்பட்டுவிடும். எவ்வகையிலும் **விருப்பென்பது கூடாது.** வெறுப்பென்பது யாது? வேண்டாமை, துவேஷம், இதர வஸ்துவைப் பற்றாதிருத்தல். இந்த வெறுப்பால் இதரவஸ்துவிடத்தில் துவேஷந் தோன்றி ஜீவோபகாரத்தைத் தடை செய்யும். ஆகையால் **வெறுப்புங் கூடாது.** மேற்குறித்த **இரண்டுமற்று, சத்துவமயமாய் நிற்றல் வேண்டும்.**


விருப்பை ராகம் என்றும் வெறுப்பைத் துவேஷம் என்றும் வடமொழிச் சொற்களாற் கூறுவர். ராகத் துவேஷமின்றி நடுநிலையில் நின்றொழுக வேண்டும்.

வள்ளற்பெருமானாருக்கு விருப்பு வெறுப்புகளைத் (ராக துவேஷங்களைத்) தவிர்த்து அருட்பேற்றை அருளியது அருட்பெருஞ்ஜோதி.

அருட்பேறு பெறவேண்டுமாயின் விருப்பு வெறுப்புகளைத் தவிர்க்க வேண்டும்.

**திருச்சிற்றம்பலம்**

## மாதப்பூச ஜோதி தரிசனம், வடலூர்




**வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தால் பெறலாம் நல்ல வரமே – வள்ளலார்.**

| | | |
|---|---|---|
| 23-10-2016 | ஞாயிறு | மாதப்பூசம் மற்றும் கொடி கட்டிய நாள் |
| 19-11-2016 | சனி | மாதப்பூசம் |
| 16-12-2016 | வெள்ளி | மாதப்பூசம் |

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

விலங்குகிற்கும் நமக்கும் அனேக வித்தியாசங்கள் இருப்பினும் மிகப்பெரிய வேறுபாடு கடவுளை நினைப்பதிலும் வாயாரப் பாடுவதிலும்தான் உள்ளது. இப்படிப்பட்ட மிகப்பெரும் பாக்கியம் இருந்தும் இறையருளால் பாடப்பெற்ற பாக்களை வாயாரப் பாடாதோரை விலங்கிற்கு ஒப்பாகக் கூறுகிறது திருக்குறள். எனவே பெறுதற்கரிய மனிதப் பிறப்பெடுத்த நாம் யாவரும் பின்வரும் திருஅருட்பா பாக்களை உணர்ந்து ஓதி பக்தி செய்து நற்கதி அடைவோமாக!

தாயும்என் ஒருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியும்
தூயநின்பாதத் துணைஎனப் பிடித்தேன்
தூக்கமும் சோம்பலும் துயரும்
மாயையும் வினையும் மறைப்பும் ஆணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ
நாயினேன் இனிஓர் கணந்தரிப் பறியேன்
நல்அருட்சோதி தந்தருளே. 1

திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்சோதித் திருஉருக் காட்டாயோ
உருக்கிஅமுது ஊற்றெடுத்தே உடம்புயிரோடு உளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சி அருளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்கும்பகல் இன்றிஎன்றும் களித்திடச் செய்யாயோ
செருக்கருதா தவர்க்கருளும் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேஎன் திருநட நாயகனே. 2

தடித்த ஓர் மகனைத் தந்தை ஈண்டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாய்அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத்தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பா இனிஆற்றேன். 3

திருச்சிற்றம்பலம்

# பக்தியெனும் அமிர்தம்

பிறரிடம் அன்பு செலுத்துவது நம்மெல்லோர்க்கும் இயல்பாகவே உள்ளது. நம் அன்பிற்கு ஒரு பாத்திரம் உண்டு. அந்தப் பாத்திரம் இறைவனாக இருந்தால், அந்த அன்பைப் பக்தி என்கிறோம். பக்திக்குப் பொருள் கூற வந்த நாரதர், 'பக்தி என்பது இறைவன் மீதான பேரன்பு' என்கிறார். இறைவனிடம் அம்மாதிரியான அன்பு செலுத்துகிறவன் எதற்கும் ஆசைப்படாமல் எப்பொழுதும் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறான். மனைவி, செல்வம் போன்றவற்றில் வைக்கப்படும் பற்றும் அன்பும் பந்தத்தை மட்டுமே விளைவிக்கிறது. ஆனால் இறைவன் மேல் செலுத்தப்படும் அன்பு நம்மைப் பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. 'இது எனக்கு இன்பம் தருகிறது' என்று நம்மால் நுகரப்படும் எந்தப் பொருளுமே நமக்கு எப்பொழுதும் இன்பம் தருவதில்லை. அப்பொருள் சில சமயங்களில் நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது, ஆனால் வேறு சமயங்களிலோ துன்பத்தைத் தருகிறது. மேலும் அந்தப் பொருள் எந்த நேரத்திலும் நமக்குக் கிடைக்கும் என்று கூறவும் முடியாது. அதிலுள்ள குற்றங்குறைகள் பல. இதற்கு நேர்மாறாக இறைவன் எப்பொழுதுமே நம் மனதைக் கவர்கிறவன், எப்பொழுதும் நம்மிடையே உள்ளவன், எந்தக் குறைபாடும் இல்லாதவன். மேலும் அவன் எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமாக இருப்பவன். அப்படிப்பட்ட இறைவனை விட நம் அன்பிற்கு உரியவர் யாருளர்? இறைவனின் மேன்மை எத்தகையது என்றால் தம்மால் இனிமேல் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்ற நிலையை அடைந்த, மெய்ப்பொருளை உணர்ந்த ஞானிகளும் அவனை நினைத்த மாத்திரத்தில் பரவசமடைகின்றனர்.

இறைவன் எல்லோரிடத்திலும் கருணை காட்டுகிறான். இதை விளக்கும் கதைகள் பலவுண்டு. உதாரணமாக, அதில் ஒரு கதையைப் பார்ப்போம். ராமாயண இதிகாசத்தில் விபிஷணன் ராமனிடம் சரணடையும் போது சுக்ரீவன் விபிஷணனின் நோக்கம் குறித்து ஐயமுறுகிறான். அதற்கு ராமன், "எவன் என்னிடத்தில் ஒரே முறை 'நான் உன்னுடையவன்' என்று சரணம் அடைகிறானோ, அவனுக்கு நான் அபயம் அளிக்கிறேன்" என்று சொல்கிறான். உண்மையான பக்தன் தன் உடலையும் மனதையும் இறைவனிடம் அர்ப்பணித்து எல்லாவற்றையும் இறைவனின் கைகளில் ஒப்படைத்துவிடுகிறான். அதனால் அவன் எதன் பொருட்டும் கவலைப்பட வேண்டியதில்லை. தன்னிடம் அடைக்கலம் அடைந்த பக்தர்களின் அன்பிற்கு வசப்பட்ட கிருஷ்ணர் உத்தவரிடம், "ஒன்றிற்கும் ஆசைப்படாதவனும், எவரிடத்திலும் வெறுப்பில்லாதவனும், சாந்தமானவனுமான முனியின் கால் தூசியினால் என்னைத் தூய்மையாக்கிக் கொள்வதன் பொருட்டு நான் அவனைப் பின் தொடர்கிறேன்" என்று

கூறுகிறார். பிரபஞ்சத்திற்கே முழு அதிபதியான இறைவனே இப்படிக் கூறுவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறதல்லவா?

சரி, உண்மையான பக்தன் இறைவனால் பார்த்துக் கொள்ளப்படுகிறான் என்று சொன்னோம். அப்போது அவனுக்கு எந்த விதமான இடர்ப்பாடும் வரக்கூடாது என்றால், அப்படியில்லை. பகவான் கருணை மிக்கவன் மட்டுமல்லாது நடுநிலை தவறாதவனும் கூட. முந்தைய பிறவிகளில் பெரும் பாவங்கள் செய்த ஒருவனுக்குத் துன்பம் என்கிற தண்டனையை அளிக்காமல் விடுவது எந்த விதத்திலும் நியாயமாகாது; நீதிக்குப் புறம்பானது. கருணை காட்டுகிறேன் என்கிற பெயரில் ஒரு நீதிபதி கொலை செய்தவர்களை விடுவிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரால் சமூகத்திற்குப் பெரிய தவறன்றோ நேர்கிறது? ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையை முன்னிட்டோ, குற்றம் செய்தவன் தன் தவறை உணர்ந்து கழிவிரக்கம் கொண்டுள்ளான் என்ற காரணங்களினாலோ ஒரு நீதிபதி குற்றவாளியின் தண்டனையைக் குறைக்கலாம். அதே போல் நீதியின் வடிவான இறைவன் தன் பக்தனுக்கும் தண்டனை அளிக்கிறான், ஆனால் தண்டனையை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்கவும் செய்கிறான். கண்டிக்கிறாள் என்பதனால் ஒரு தாய்க்குத் தன் குழந்தையிடம் அன்பு இல்லை என்று ஆகிவிடுமா?

இறைவன் எல்லாமறிந்தவன், சர்வ வல்லமை உடையவன், எங்கும் நிறைந்தவன், கருணைக்கடல். அதனால் அவனுக்குத் தெரியாத ஒன்றைப் பக்தன் அவனிடம் தெரிவிக்கப் போவதில்லை. மேலும், ஒரு பக்தன் இறைவனிடம், "எனக்கு இது வேண்டும், எனக்கு அது வேண்டும்" என்று கூறினால் அவனுக்கு இறைவனின் அருட்கொடையில் முழு நம்பிக்கை இருக்கிறது என்று எவ்வாறு சொல்ல முடியும்? முழு நம்பிக்கை இல்லாத போது கூட இறைவனிடம் ஒன்றும் கேட்காதிருப்பதே சரி. இறைவன் நினைப்பது தவறாது நடக்கும் என்பது நிச்சயம். அதே போல், பெரும்பாலான மனிதர்களுக்குத் தாம் விரும்பியது கிடைத்தவுடன் மகிழ்ச்சியும், கிட்டாதபோது வருத்தமும் ஏற்படுவதும் நிச்சயம். அதனால், **ஒருவன் தன் மனதை இறைவனின் சங்கல்பத்திற்கு அடிபணிய வைத்தால் அவனுக்கு எவ்வித வருத்தமும் ஏற்பட வாய்ப்பில்லை. பக்தன் ஒருவனுக்குத் துன்பம் நேர்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதுவும் தனது நன்மைக்காக இறைவன் கொடுத்தது என்ற மனத்திட்பம் இவனுக்கு இருந்தால் துன்பம் நேரும் வேளையில் அழுது புரள மாட்டானல்லவா?** தவிரவும், துயரம் மேலிட்டு அரற்றுதலால் எந்தப் பயனும் இல்லை. அவ்வாறு செய்வது துன்பத்தை அதிகமாக்குமே தவிரக் குறைப்பதில்லை.

பக்தி நெறிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது என்னவென்றால், அவ்வழியில் சிறிது தூரம் சென்றவுடனேயே மன அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. இவ்வழியில் செல்வதற்கு ஒருவனின் கூரறிவு, ஆழ்ந்த புலமை, திறமை, வயது, வலிமை, சமூக அந்தஸ்து, பதவி, செல்வம், இவை எதுவும் முக்கியமில்லை. இறைவன் எல்லோரது மனதையும் கவர்பவன்.

ஆதலால், அவனிடம் அன்பு செலுத்துவது எல்லோராலும் செய்யக் கூடிய ஒன்று தான். ஒரு மனிதன் மற்றொருவனுடன் பழகுவதாலும் அவனைப் பற்றி உயர்வாக எண்ணுவதாலும் அன்பு ஏற்படுகிறது. அதே போல், இறைவனின் பெருமையைப் பற்றி இடைவிடாது சிந்தித்தல் அவனிடத்தில் பக்தியை உண்டாக்குகிறது. இறைவனைப் பற்றிச் சிந்தித்தல் எளிதான ஒன்றுதான். அவனுடைய திருநாமங்களை மனதில் ஜபிப்பதாலும், எல்லாச் செயல்களையும் அவனுக்கே அர்ப்பணம் செய்வதாலும் இறைவனின் நினைவு நமக்கு எப்பொழுதும் இருக்கும். சிறந்த பக்தர்களின் சகவாசம் நம் பக்தி வளர உதவி புரிகிறது, ஏனெனில் அவர்கள் இறைவனிடம் சரணடைந்த மனதையுடையவர்கள். அவர்கள் மனதில் நிலவும் அமைதி நம்மை உயர்விக்கின்றது. மாறாகத் தீயோர்களின் சகவாசத்தினால் அதற்கு நேர் எதிர் விளைவு ஏற்பட்டு மனம் இறைவனிடம் செல்லாமல் புறப் பொருட்களை நாடுகிறது.

**ஒருவன் முதன் முறையாகத் தன் மனதை இறைவனிடம் நிலைநிறுத்த முற்படும் போது, மனம் அவனுடன் ஒத்துழைக்காமல் இருக்கலாம்; மனம் அமைதியும் மகிழ்ச்சியுமற்று இருக்கலாம். அதனால் அவன் மனம் தளர வேண்டியதில்லை. மனம் செய்யும் கூத்தை இறைவனிடம் சொல்லி அவன் படும் கஷ்டத்தையே தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம். இறைவனிடம், "என் மனம் உன்னைத் தியானிக்க எப்படி மறுக்கிறது என்று பார்த்தாயா?" என்று முறையிடலாம். இப்படி இறைவனுடன் பேசுவதும் அவனைச் சிந்திக்கும் வகைகளுள் ஒன்றாகும்.**

ஒருவன் சிறிது நேரம் தன் மனதைக் கடவுளின் பக்கம் திருப்பினாலே அவன் மனம் நிம்மதி அடைகிறது. ஏனெனில் அவன் இறைவனைப் பற்றிச் சிந்திக்கும் போது எவ்விதக் கவலையுமற்றுத் தாயின் கைகளில் இருக்கும் குழந்தை போல் இருக்கிறான். இதே மன அமைதியும் மகிழ்ச்சியும் உயர்ந்த பக்தர்களிடையே இருக்கும் போதும் ஏற்படுகிறது. பக்தி நெறியில் காலடி எடுத்து வைக்கும் ஒருவனுக்கு இந்த அமைதியும் மகிழ்ச்சியும் இறைவனை மேற்கொண்டு தியானிக்க உதவும் ஊன்று கோல்களாக இருக்கின்றன. ஆனால் துவக்கத்தில் மனம் இறைவனைப் பற்றி தொடர்ந்து சிந்திக்காமல் உலக விஷயங்களிலேயே ஈடுபடும் அபாயம் இருக்கிறது. இதை உணர்ந்து அம்மாதிரியான போக்கிற்கு இடம் கொடுக்காமல், மனதை அடிக்கடி இறைவன் பக்கம் திருப்ப முயற்சிக்க வேண்டும்.

சங்கர பகவத்பாதர் "சிவானந்தலஹரீ" என்ற நூலில் பக்தியின் பரிமாணத்தைப் பற்றி ஒரு சுலோகத்தில் பாடியுள்ளார். **பக்தியின் முதல் நிலையில், பக்தன் எப்படியோ இறைவனிடம் வருகிறான்; இதற்கு உதாரணமாகச் சங்கரர் அழிஞ்சில் (அங்கோலம்) மரத்தின் விதையைக் காட்டுகிறார். அழிஞ்சில் விதை மரத்தின் பக்கவாட்டில் விழுந்து அடிமரத்தில் ஊன்றி வளர்கிறது. அது போல் இறைவனிடம் வந்த பக்தன் அவனுடன் ஒட்டிக் கொள்கிறான் என்கிறார். இதன் பின்னர், பக்தன் இறையருளின் விளைவுகளை இன்னமும் தெளிவாக உணர்கிறான். காந்தம் ஒன்று எப்படி ஊசியைத் தன் சேர்வது போல் பக்தன் இறைவனுடன் ஒன்றி விடுகிறான். இதுவே பக்தியின் உச்ச நிலை.**

**பக்கம் ஈர்க்கிறதோ அது போல் இறைவனும் பக்தனைத் தன்னிடம் ஈர்க்கிறான். மூன்றாவது நிலையில் பக்தனும் இறைவனும் கற்பிற் சிறந்த மனைவியும் கணவனும் போல் ஒருவரோடு ஒருவர் இணைந்து இருக்கின்றனர். இவர்களுக்கிடையே உள்ள அன்பு பரஸ்பரமானது. இந்த விதமான அன்பு முற்றி அடுத்த நிலைக்குச் செல்கிறது. இந்நிலையில் மரத்தைச் சுற்றிப் படரும் கொடி மரத்திற்கு அழகு சேர்க்கிறது போல பக்தனும் இறைவனின் மேன்மையை உயரச் செய்கிறான். பிரகலாதன் போன்ற சிறந்த அடியார்கள் இறைவனுக்கே அணிகலன்களாகத் திகழ்கின்றனர். கடைசியாக, ஓடும் ஆறு கடலுடன் சேர்வது போல் பக்தன் இறைவனுடன் ஒன்றி விடுகிறான். இதுவே பக்தியின் உச்ச நிலை.**

இறைவனிடத்தில் எப்படி அன்பு செலுத்த வேண்டும் என்பதை இறைவனே கிருஷ்ணராக மிகக் கருணையுடன் உபதேசித்துள்ளார். இந்த உபதேசத்தை அவர் பக்தனின் தகுதிக்கேற்ப அமைத்துள்ளார். இந்தப் பிரபஞ்சத்தில் இறைவனைக் காட்டிலும் வேறு பொருள் ஒன்று இல்லை. எனவே பக்தியில் முதிர்ந்தவன் தன் மனதையும் புத்தியையும் விராட் புருஷனான இறைவனிடம் செலுத்துகிறான், இவன் பிரபஞ்சத்தில் உள்ள யாவற்றையும் இறைவனின் சரீரமாகப் பார்க்கிறான். இப்படி எல்லாவற்றையும் இறைவனாகப் பார்க்க முடியாதவன் இறைவனை இடைவிடாது ஏதாவது ஒரு குறிப்பிட்ட உருவமாகத் தியானிக்க வேண்டும் என்று கிருஷ்ணர் உபதேசிக்கிறார். இப்படியும் தியானம் செய்ய முடியவில்லை என்றால், ஒருவன் இறைவனின் துதி, பூஜை, இறைவனின் மேன்மைகளைக் கேட்டல் முதலியவற்றில் ஈடுபட வேண்டும். இதுவும் ஒருவனால் செய்ய முடியவில்லை என்றால் அப்படிப்பட்டவனுக்கும் ஒரு எளிய வழி உண்டு. அதையும் பகவான் கிருஷ்ணரே உபதேசித்துள்ளார்.

இறைவனை நாடுபவன், மனதைக் கட்டுப்படுத்தி எல்லாச் செயல்களையும் இறைவனுக்காகவே செய்ய வேண்டும். செயல்களின் பலன் மீதான ஆசையைத் துறக்க வேண்டும். பொதுவாக எல்லோரும் பலனை எதிர்ப்பார்த்தே எந்தவொரு செயலையும் செய்கின்றனர். ஆனால் அப்படிச் செய்வது பந்தத்திற்கு வழி வகுக்கும். இதற்கு மாறாக, இறைவனை நாடும் பக்தன் தான் இறைவன் மீது கொண்டிருக்கும் அன்பினால் உந்தப்பட்டு, எச்செயலையும் இறைவனுக்காகவே செய்கிறான். அவனுக்குச் செயல்களின் பலனில் பற்றில்லை. வெற்றி, தோல்வி இரண்டையும் இவன் சமமாகப் பார்க்கிறான்.


இப்படி இறைவனுக்காகவே செயல்படுகிறவன் தீய செயல்களைத் தவிர்க்கிறான். தன் செயல்கள் எல்லாவற்றையும் உறுதியுடனும் ஊக்கத்துடனும் செய்கிறான். மறைநூல்களை இறைவனின் ஆணைகளாகக் கருதும் இவன் அவற்றில் விதிக்கப்பட்ட செயல்களைத் தவிர்க்காது செய்கிறான். இறைவனின் ஆணைகளை மீறுபவனும் தனக்கு

விதித்திருக்கும் கர்மாக்களைச் செய்யாமல் இருப்பவனும் எப்படி இறைவனின் உண்மையான பக்தனாக இருக்க முடியும்? ஆதலால், பலன்களில் பற்றின்றிச் செய்யப்படும் செயல்கள் கவனக்குறைவாகச் செய்யப்படுகின்றன என்றோ திறமையின்றிச் செயல்படுத்தப்படுகின்றன என்றோ நினைப்பது தவறு. சொல்லப் போனால், ஒரு பக்தனுடைய செயல்திறன் பக்தியில்லாதவனின் செயல்திறனைக் காட்டிலும் சிறப்பாகவே இருக்கும். அது எப்படி என்று கேட்டால், உலகத்தில் பற்றுள்ளவனைப் போலல்லாமல் கவலை, மனசோர்வு முதலிய துன்பங்களால் உண்மையான பக்தன் பாதிக்கப் படுவதில்லை.


பகவான் கிருஷ்ணர் கீதையில், "உன் மனதை என்னிடத்தில் வை. என் பக்தனாயிரு. இப்படி நீ நடந்து கொண்டு உன் தேவைகள், செயல்கள், அவற்றின் பலன்கள் ஆகிய எல்லாவற்றையும் எனக்கே அர்ப்பணித்து என்னிடத்திலேயே சேருவாய். இதை நான் உனக்கு உறுதியளிக்கிறேன், ஏனென்றால் நீ எனக்கு மிகவும் பிரியமானவன்" என்று நிச்சயமாகக் கூறுகிறார். நம்மிடத்தில் இம்மாதிரியான அன்பு வைத்திருப்பவரும் மனதிற்கு இனியவருமான இறைவனிடம் யார்தான் அன்பு செலுத்த மாட்டார்?

எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும் எய்துக
பிறப்பில் இனிநான் எய்தாமை எய்துகினும் எய்திடுக
இருமையினும் இன்பம் எய்தினும் எய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக
மிகுவாழ்வு வந்திடினும் வருக வறுமை வருகினும் வருக
மதிவரினும் வருக அவமதி வரினும் வருக உயர்வோடு
இழிவகைத் துலகின் மற்றெது வரினும் வருக
அலது எது போகினும் போக
நின் இணையடிகள் மறவாத மனம் ஒன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும் அரசே — திருஅருட்பா

திருச்சிற்றம்பலம்

## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன



### வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு விளம்பர விபரம்

அன்பர்கள் நமது மாத இதழில் தங்கள் நிறுவனங்கள், கடைகள் தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.

1) முழுபக்க விளம்பரம் - ரூ. 2000

2) அரை பக்க விளம்பரம் - ரூ 1000

3) முன் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

4) பின் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

Advertisement

மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு


தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus ( Free )

OS ( Licenced )










பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!
Old Refurbished New

BeyondexC Network Solutions
பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

# உள்ளது உரைத்தல்
# சூரபத்ம சம்ஹாரம்



**ப**துமாசுரன் என்பது பதுமம் – நாபி, அ – அவா, சுரன் – சுழித்து எழுதல். நாபியினிடமாய் அடங்காமல் எழும்பும் குணத்தை அடக்கியும் தடைபடாதது பத்மாசுரனாகிய அவா. கஜமுகம் என்பது மதம். சிங்கமுகம் என்பது மோகம். இவைகளை வெல்வது ஐந்தறிவாலும் உபசத்தியான பஞ்ச சத்தியாலுங் கூடாது. ஆதலால் சிவத்தால் தடைப்பட்டது. சுப்பிரமணியம் என்னும் ஷண்முகரால் சம்மரிக்க வேண்டியது எப்படி எனில் பஞ்ச சத்தியோடு அனன்னியமாகிய சம்வேதனை என்னும் அருட்சத்தியையுங் கூட்டிச் சுத்த அறிவே வடிவாகிய ஆறறி வென்னும் முகங்களோடு, சுத்தஞானம் சுத்தக்கிரியை என்னும் சத்தியுடன், கூர்மை பொருந்திய வேல் என்னும் விவேகத்தால், தயாவடிவாய் அவா மோக மதங்களை நாசஞ் செய்வது சூரசம்மாரம். மயில் என்பது மேற்படி தத்துவங்கள் நஷ்டமானாலும் அவற்றின் அக்கிரமம் அதிக்கிரமம் கெட்டுக் கிரமம் மாத்திரம் இருப்பது. பூர்வ வாசனாதிகள் பல வண்ணமாய் விரிந்து ஆடுவது இயல்பாதலால், அவற்றை அசைய வொட்டாது மத்தியில் ஏறி இருப்பதாகிய சுத்த அறிவே ஷண்முகம். விகல்ப ஜாலமே மயில். இவ்வண்ணமே அண்டத்திலும் உண்டு. மேலும், நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் மணிபோல் ஓர் ஜோதியிருக்கின்றது. அந்த ஜோதியே ஷண்முகம்.

– திருஅருட்பா உரைநடைப்பகுதி

திருச்சிற்றம்பலம்

# சன்மார்க்க பெரும்பதி வருகை

**சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும் இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந்தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும்.**

பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திரபேதங்களும், ஜாதிபேதங்களும், ஆசாரபேதங்களும் போய், சுத்த சன்மார்க்கப் பெருநெறி யொழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது 29 மாதத்திற்குமேல். இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத்தேவர்களும், எல்லாக்கடவுளரும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன்.

என்னை யடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள் அஞ்சவேண்டாம்.

- திருஅருட்பா உரைநடைப்பகுதி

**சுத்த சன்மார்க்க சுகத்தனி வெளியெனும்**
**அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி - அகவல் [30]**

திருச்சிற்றம்பலம்

# திருமந்திரம்

**கைவிடல் ஆவது ஒன்று இல்லை, கருத்தினுள்**
**எய்தியவனை இயல்பினால் ஏத்துமின்;**
**ஐவருடைய அவாவினில் தோன்றிய**
**பொய் வருடு ஐய புலன்களும் ஐந்தே. – துறக்க வேண்டா; தோத்திரம் செய்க**

புலன்களை அடக்குவதற்குப் பொருள் எதனையும் துறக்க வேண்டா. ஐம்பொறிகளின் மூலம் வரும் உணர்வே புலன். அதனால் மனம் கொள்ளும் அவா புலனிச்சை எனப்படும். அது நுட்பமானது. பொய்யானது (பொய்யான மயக்கம்). அதனை வெல்ல வேண்டும். அதற்குச் சிந்தையில் இறைவனை நிறுத்தி, மனத்தாலும் சொல்லாலும் போற்றுக.

**கறுத்த இரும்பே கனகம் – அது ஆனால்**
**மறித்து இரும்புஆகா வகை – அது போலக்**
**குறித்த அப்போதே குருவருள் பெற்றால்**
**மறித்தும் பிறவியில் வந்து அணுகாரே. – குருவருள்**

இரும்பு இரசவேதியில் பொன்னானால், மீண்டும் இரும்பு ஆகாது. அதுபோல, ஆன்மா பக்குவம் பெறும்பொழுது, குருவின் அருளைப் பெற்றால், மீண்டும் பிறவாது.

**“கண்காணி இல்” என்று கள்ளம் பல செய்வர்;**
**கண்காணி இல்லா இடம் இல்லை, காணுங்கால்;**
**கண்காணியாகக் கலந்து எங்கும் நின்றானைக்**
**கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே. – அவனுக்கு எங்கும் கண்**

மாந்தர் தாம் செய்வதை ஒருவரும் மேற்பார்க்கவில்லை என்று வஞ்சனை பலவும் செய்வர். மேற்பார்ப்பவன் இறைவன். அவன் இல்லாத இடமே இல்லை. எவ்விடத்திலும் உள்ள பொருள்கள் தனக்கே உரிமை என்னுமாறு அவன் அவற்றை உண்ணின்று இயக்குகிறான். தம்முடைய புருவத்திடைக் கண்ணால் அவனைக் கண்டோர் வஞ்சனை செய்யார்.

**காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்**
**காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்**
**தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவர்கள்**
**காயத்து ணின்ற கருத்தறி யாரே. – உள்ளேவிட்டு வெளியே தேடுவர்**

ஆகாயம் என்னும் பூதத்தை ஏனைய பூதங்களுடன் கலந்து உலகத்தைப் படைத்தவனை, சிதாகாயம், பரமாகாயம் என்ற வெளியைத் (அறிவு வெளி) தன் இருப்பிடமாகக் கொண்டவனை, நம் உடம்பிலும் ஒளிமயமாக விளங்கும் நந்தியை மக்கள் நாட்டில், பல தலங்களில் திரிந்து தேடுவர். தம் உடம்பிலேயே அவன் உறைவதை அறியாது போயினர்.

## பாடலும் பொருளும்

# திருஅருட்பா எனும் மாமறை

ஒலிவடிவு நிறஞ்சுவைகள் நாற்றம் ஊற்றம்
உறுதொழில்கள் பயன்பலவே றுளவா யெங்கும்
மலிவகையா யெவ்வகையு மொன்றா யொன்றும்
மாட்டாதா யெல்லாமும் வல்ல தாகிச்
சலிவகையில் லாதமுதற் பொருளே யெல்லாந்
தன்மயமாய் விளங்குகின்ற தனியே யாண்பெண்
அலிவகையல் லாதவகை கடந்து நின்ற
அருட்சிவமே சிவபோகத் தமைந்த தேவே – மகாதேவமாலை (53)

ஒவ்வொரு ஜீவனுக்கும் ஓசை இருக்கின்றது. உருவம் இருக்கின்றது. வண்ணம் இருக்கின்றது. சுவை அறியும் திறமையும் இருக்கின்றது. சுகந்தம் அல்லது மோப்பம் என்பதை அறியக்கூடிய திறனும் இருக்கின்றது. ஜீவனின் ஓசையைக் கேட்டே அந்த ஜீவன் இன்னதென்று அறியலாம். உருவத்தாலும் அறியலாம். வண்ணத்தினாலும் அறியலாம். ஒவ்வொரு ஜீவனுக்கும் இவை அனைத்தும் ஒன்றாயிராமல் பலவேறு வகையாய் அமைந்துள்ளன. அவைகளின் உணவிலேயும் மாற்றம் உள்ளது. ஆந்தை அலறும், குயில் கூவும், காகம் கரையும், மயில் அகவும், யானை பிளிரும், சிங்கம் கர்ஜிக்கும், ஓநாய் ஊளையிடும், நாய் குரைக்கும், புலி உறுமும். இவ்வாறு ஒவ்வொரு ஜீவனின் ஓசைக்கும் உருவத்திற்கும் வெவ்வேறு பெயர் வைக்கப்பட்டுள்ளது. இடப் பொருள்களிலும் ஓசை பலவிதமாக ஒலிக்கின்றது. தானாக ஒலிக்காது, தட்டினால் ஒலிக்கும், எப்படியும் ஓசையில் ஒவ்வொரு பொருளும் மாறுபடுகின்றது. உருவத்தில் ஜீவன்கள் எவ்வாறு ஒன்றுக்கொன்று மாறுபட்டு பல்வேறு இனங்களாக உள்ளனவோ அவ்வாறே ஜடப் பொருள்களிலும் உருவ மாற்றம் உள்ளது. அஃதே போல் வண்ணங்களிலும் மாற்றம் பல காண்கின்றோம். ஒலி, உருவம், வண்ணம், சுவை, சுகந்தம் முதலிய வேறுபாடுகளால் பலப்பல பலன்களை அனுபவிக்கக்கூடிய வகையில் ஆக்கமிகு தொழில்கள் பல அவற்றால் இயக்கப்படுகின்றன.

இவை அனைத்தும் ஓர் அளவோடு நிறுத்தப்படாமல் எங்கும் நிறைந்து விளங்குகின்றன. நிறைந்து விளங்குவது **'எங்கும் மலிவகையாய்'** எனக் கூறப்பட்டுள்ளது. ஜீவன்கள் ஊர்வன, பறப்பன, ஊறுவன, நடப்பன என நான்கு வகையாய்ப் பிரிந்துள்ளன. ஒவ்வொரு வகையிலும் அதாவது ஊர்வன என்றால் பல்லி, பாம்பு, புழு போன்று பல்வேறு வகை உண்டு. பறவைகள் என்றால் காகம், கழுகு, குருவி, கிளி, மயில், குயில் போன்று பல இனங்கள் உண்டு. இவ்வாறே மிருகங்களிலும் யானை, குதிரை, புலி, சிங்கம், கரடி, மாடு, ஆடு போன்று பல இனங்கள் உண்டு. ஒவ்வொரு இனத்திலும் பல கோடிக்கணக்கான ஜீவன்கள் உலகெங்கும் நிறைந்து

அதாவது மலிந்து அவை அவைகட்குரிய ஓசை, வடிவம், நிறம், சுவை, சுகந்தம் முதலியவற்றைப் பெற்று நிற்கின்றன. எவ்வகையும் ஜீவன்கள் என்ற ஒன்றில் அடங்கி விடுகின்றன.

ஒவ்வொரு ஜீவனும் எதை எதை எந்தெந்த நேரத்தில் எப்படியெப்படி அனுபவிக்கச் செய்ய வேண்டுமோ அதையதை அந்தந்த நேரத்தில் அப்படி அப்படி பொருந்தப் பொசிப்பிக்கின்றது அவனுடைய சர்வசுதந்தரம். எந்த ஜீவனுக்கும் முழுமையான தற்சுதந்திரம் இல்லை. இதைத்தான் **'ஒன்றும் மாட்டாதாய்'** என்றார்.

படைத்தல், காத்தல், துரிசு நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல் விளக்கம் செய்வித்தல் ஆகிய ஐந்து தொழில்களையும் தானே பெற்று தானே நடத்துகின்ற வல்லபமுடையவர். எல்லாம் செய்யவல்ல தெய்வம் என்பதையே **'எல்லாமும் வல்லதாகி'** என்றார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது போல அழியும் பொருள்கள் அத்தனையும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இறந்து போய்க்கொண்டிருக்கும் ஜீவன்கள் மறுபக்கம் பிறந்து கொண்டேயிருப்பதும், அழிந்துகொண்டே இருக்கும் ஜடப்பொருள்களும் மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருப்பதும் தான் பிரபஞ்ச இயக்கம். அந்த இயக்கம் ஒரு நிலையில் நின்றுவிடாமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டே உள்ளது. இவ்வாறு ஐந்தொழில் இயக்கங்களால் பிரபஞ்ச இயக்கம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இறைவனுக்கு ஒரு சிறிதும் இதில் சலிப்பே இல்லையாம். இறைவனுக்கு ஒருவேளை ஒரு சிறு துளி சலிப்பு ஏற்பட்டால் உலக இயக்கம் நின்றுவிடும். பிரபஞ்ச இயக்கம் மற்றும் ஜீவ உருவங்களின் தோற்றமும் அழிவும் அதாவது ஜீவன்களின் பிறப்பும் இறப்பும் என்றும் நடைபெற்றுக் கொண்டே இருப்பதால்தான் இறைவனைச் **'சலிவகையில்லாத முதற்பொருளே'** என்றார்.

எல்லாப் பொருள்களிலேயும் இறைவன் இருக்கின்றான் அல்லவா? எல்லாப் பொருள்களிலும் அவன் கலந்து எல்லாமே அவன் என்று கூறுமளவு அவனே எல்லாமாகி இருக்கின்றான். எல்லாவற்றிலும் அவன் இருக்கின்றான் என்றால் எல்லாமும் அவனுள் இருக்கின்றனவே. இதையே 'உயிருள் யாம் எம்முள் உயிர்' என்றும் கூறியுள்ளார். எல்லாம் அவன் மயமாகியே என்றும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இறைவனுடன் எதனையும் ஒப்பிட்டுக் கூறவொண்ணாது தனியே இயங்கி வருகின்றானாம்.

அந்த இறைவன் ஆணா, பெண்ணா இரண்டுமற்ற அலியா என்றால் அவன் ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல. எவ்வகையிலும் அவன் அடங்கியவனல்ல. இவையனைத்தும் கடந்து நிற்கின்ற அருளாய் விளங்குகின்ற அருட்சிவமே என்று அழைக்கின்றார்.

ஐந்தொழில் இயற்றல் அந்த இறைவனுக்கு ஒரு விளையாட்டு. பொதுவுணர் உணரும்போதலால் பிரித்தே அது எனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி என்றார். இறைவன், தவம் செய்து சிவயோக அனுபவம் பெற்றவரிடத்தே விளங்குகின்றார்.

**திருச்சிற்றம்பலம்**

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

காலை உணவிற்கு - ரூ.2,500/- மதிய உணவிற்கு - ரூ.6,500/-

இரவு உணவிற்கு - ரூ.3,500/-

மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) - ரூ.12,500/-

பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ரூ.4,000/-

பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) ரூ.2,500/-

அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) - 15 லிட்டர்

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

Please donate - Cheque / DD In favour of

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

Please donate through: **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு பாபு சாது

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல், திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:- **8012680865, 7502026565**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# அக்டோபர் 23
# சுத்த சன்மார்க்க கொடி கட்டியநாள் விழா

ஸ்ரீமுக வருடம், ஐப்பசி 7ம் நாள், புதவாரம் மேட்டுக்குப்பத்தில் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் நிகழ்த்திய பேருபதேச உரையிலிருந்து...



இக்காலம் சன்மார்க்க காலம். இதற்கு சாட்சியாக இப்போதுதான் சன்மார்க்க கொடி கட்டிக் கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில்:- நமது நாபி முதல் புருவமத்தி ஈராக ஒரு நாடி இருக்கின்றது. அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகிறது. அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம். அச்சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கிறது. இக்கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ்அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் விளங்கும்.

வள்ளல் பெருந்தகை முத்தேக சித்திபெற்ற மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகைக்கு அனைவரும் வருக! வருக!




## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

– சன்மார்க்க மாதஇதழ்

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற "வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு" மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் சந்தாதாரராக்கி அறிவு தானம் செய்து பயனடையுங்கள். தொடர்புக்கு: 8012680865

ஆண்டு சந்தா ரூ.120/- 5 வருட சந்தா ரூ.600/-

Follow us on:

www.vallalarmission.org
www.fasebook.com/vallalarmission
vallalartrust@gmail.com
Group name: vallalarmission Cell no.:9942776351

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly October 2016, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# மாதாந்திர கூட்டுப்பிரார்த்தனை

பாட்டால் உனது பதத்தை நாடிப் பாடும் வாயரே
பதியே இந்த உலகில் எனக்கு மிகவும் நேயரே
நாட்டார் எனினும் நின்னை உளத்து நாட்டார் ஆயிலோ
நயவேன் சிறிதும் நயத்தல் கயக்கும் எட்டிக் காயலோ - திருஅருட்பா 1830

நாள்: அக்டோபர் 23 ஞாயிற்றுக் கிழமை

இடம் : வள்ளலார் சத்திய யோகசாலை,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**நிகழ்ச்சி நிரல்**

- அகவல் பாராயணம்
- சத்சங்கம்
- ஜோதி தியானம்
- அன்னதானம்



தொடர்புக்கு: 96009 80270, 94434 89849.

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 97896 02258